**புதுச்சேரி அரசு**
**பள்ளிக் கல்வி இயக்ககம்**

புதுச்சேரி, 05.07.2017

## மார்ச் - 2017, மேல்நிலைத் தேர்வு எழுதிய பள்ளி மாணாக்கர்கள் மற்றும் தனித்தேர்வர்களுக்களுக்கான அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளுதல் பற்றிய

## செய்திக் குறிப்பு

நடைபெற்று முடிந்த மார்ச் - 2017 மேல்நிலை பொதுத் தேர்வெழுதிய **பள்ளி மாணாக்கர்கள்** அனைவரும் தங்களுக்குரிய அசல் மதிப்பெண் சான்றிதழை **10.07.2017 (திங்கட்கிழமை)** முதல் அவரவர் பயின்ற பள்ளியின் முதல்வர் / துணை முதல்வரை அணுகி பெறறுக்கொள்ளலாம்.

தனித்தேர்வராக (PRIVATE CANDIDATE) தேர்வெழுதிய அனைவரும் தங்களது அசல் மதிப்பெண் சான்றிதழை, **10.07.2017 (திங்கட்கிழமை) முதல் 31.07.2017 (திங்கட்கிழமை) வரை** அவரவர் தேர்வெழுதிய தேர்வுமையங்களின் முதல்வர் / துணை முதல்வரை அணுகி பெற்றுக்கொள்ளலாம். மேலும், முதன்முதலாக தனித்தேர்வராக (HP CANDIDATES) பதிவு செய்த தேர்வர்கள் பதிவுசெய்யும்போது ஒப்படைத்த 10ஆம் வகுப்பு அசல் மதிப்பெண் சான்றிதழ், அசல் பள்ளி மாற்றுச் சான்றிதழ் முதலிய ஆவணங்களையும் தவறாமல் அசல் மதிப்பெண் சான்றிதழுடன் கேட்டு பெற்றுச் செல்ல வேண்டும். தனித்தேர்வர்களுக்கு இவ்வாய்ப்பு நீட்டிக்கப்படமாட்டாது.

**(ஜெ. கிருஷ்ணராஜு)**
**இணை இயக்குநர்**

இந்த செய்தியினை தங்களது நாளிதழ் / தொலைக்காட்சியில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**(ஜெ. கிருஷ்ணராஜு)**
**இணை இயக்குநர்**